இல்லாத இடங்களில் தண்ணீர் கொடுக்கிறோம். எப்படியும் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். லாரியிலே கொடுப்பதற்குத் காரணம் அங்கே குழாய்கள் இல்லாத காரணத்தால்தான். அதாவது 'பப்ளிக் ஃபவுன்டன்' பொதுமக்கள் உபயோகப்படுத்தும் நீர் கொடுக்கும் பகிர்மான குழாய்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், திருவொற்றியூரிலே கடற்கரையோரத்தில் நிறுவப்பட்டுள்ள நீருற்றுக் கிணறுகள் மூலம் தினசரி 18 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஒரு வேளை அந்தத் தகவல் அதிகாரிகளால் தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று நான் கருதுகிறேன். காரணம் முந்தாநாள் நான் திருவொற்றியூர் சென்றிருந்தபோது குடிநீர் தட்டுப்பாடு மிகவும் கடுமையாக, மோசமாக இருக்கின்றது என்று என்னிடம் ஏராளமான பேர்கள் சொன்னார்கள். ஒரு வேளை அந்த 18 இலட்சம் காணாமல் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட பகுதியிலே கூடுதலாக தண்ணீர் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அதேபோல சென்னைக்கு கிருஷ்ணா தண்ணீர் வரும் என்று சொல்கிறார்கள். விரைவிலே கொண்டு வந்து சென்னைக்கும், அதன் சுற்றுப்புற நகரங்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 18 லட்சம் வழங்காமல் இருக்குமானால், அது தவறாக இருக்குமானால், அதை விசாரித்து அந்த அதிகாரிமீது, மிகக் கடுமையாக இன்குலூடிங் சஸ்பென்சன் நடவடிக்கை எடுக்கப்படும். அவர் சொல்வதைப்போல அந்த தண்ணீர் போகாது என்றால் அதைப் பற்றி விசாரிக்க குடிநீர் வாரிய அதிகாரிகள் மூலம் ஏற்பாடு செய்கிறேன். கிருஷ்ணா நதி நீரைப் பற்றி பிறகு விவரமாக விவாதிக்கலாம்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 29/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.29/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) (சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

---

*1982 ஏப்ரல் 3 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS